## பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க எங்கள் தமிழ்மொழி

(1) போற்றும் இலண்டன் தமிழ்க் கழகம்
பொலிந்து மேலும் வளர்ந்துமே
நாற் றிசையும் தமிழ் பரப்ப
நாமும் தமிழைக் கற்போமே (வாழ்க)

(2) ஒழுக்க மோடு விழுப்ப மிக்க
உயர் குணங்கள் வளர்ந்திட
தொழுது நாமும் தொன்மையான
தூய தமிழைக் கற்போமே (வாழ்க)

(3) சேரன் சோழன் பாண்டியன்
சேர்ந்து வளர்த்த தமிழினை
பாரில் பரப்ப பாலர் நாமும்
பயில்வோம் வாரீர் தமிழினை (வாழ்க)

(4) அன்னை மொழி தமிழினை
ஆர்வமோடு கற்று நாம்
இன்பம் எய்தி என்றும் வாழ்வோம்
எம் கழகம் வாழ்கவே (வாழ்க)

ஆக்கம்: திரு. சு. இரட்ணம்